**கேகாலை நகர சபை**
**கேகாலை மாவட்டம்**

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2018 ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் 2019 மார்ச் 30 திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அந் நிதிக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளரின் பொழிப்பு அறிக்கை 2019 மே 31 மற்றும் விரிவான கணக்காய்வு முகாமைத்துவ அறிக்கை 2019 ஜுன் 25 ஆம் திகதியும் தவிசாளரிற்கு அனுப்பப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை பிரிவில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து நிதிக்கூற்றுகளின் 2018 திசெம்பர் 31 இல் கேகாலை நகர சபையின் நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

#### (அ) கணக்கீடு குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டில் வீத வரி மேலதிக பில் இடல் ரூபா 525,419 திரண்ட நிதியத்திற்கு செலவு வைக்கப்பட்டிருந்தது. | கணக்குகள் சீர் செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். | 2019 ஆண்டின் இறுதி கணக்கு தயாரிக்கும் போது சரி செய்ய நடவடிக்கை எடுக்கிறேன். |

#### (ஆ) எதிர்பாராத பொறுப்பு

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2018 ஆண்டின் திசெம்பர் 31 திகதியிற்கு நகர சபையிற்கு எதிராக 03 வெளிதரப்பினர்களினால் தாக்கல் செய்யப்பட்டிருந்த வழக்ககள் தொடர்பான தகவல்கள் நிதிக் கூற்றுக்களினூடாக வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | எதிர்பாராத பொறுப்புகளை நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். | வெளிதரப்பினர்களினால் நகர சபையிற்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டிருந்த வழுக்ககள் தொடர்பான தகவல்கள் இவ் வருடம் முதல் நிதிக் கூற்றுக்களினூடாக வெளிப்படுத்த நடவடிக்கை எடுக்கிறேன். |

**(இ) இணக்கஞ் செய்யப்படாத கணக்குகள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டு இறுதியில் 06 கணக்கு விடயங்களிற்குரிய மீதிகள் மற்றும் துணைப்பதிவேடுகள்/அறிக்கை மீதிகளிற்கிடையில் ரூபா 378,973 ஆன வித்தியாசம் காணப்பட்டது. | கணக்குகளை இணக்கஞ் செய்து சரி செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். | கணக்கு மீதிகள் மற்றும் பதிவேடுகளில் மீதிகளை இணக்கஞ் செய்து சரி செய்ய நடவடிக்கை எடுக்கிறேன். |

**(ஈ) செலுத்த வேண்டிய கணக்குகள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டு இறுதியில் ஓராண்டு காலத்தை விஞ்சியிருந்த செலுத்த வேண்டடிய வேலை கடன் கொடுத்தோர் கணக்கு மீதிகளின் கூட்டுத் தொகை ரூபா 20,830,044 ஆனது. | தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | இந்த வேலைகளுக்காக தற்போது கொடுப்பனவு தீர்க்கபடுகிறது. |

## 1.4 இணங்காமை

### 1.4.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமை தீர்மானங்களுடன் இணங்காமை

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமை தீர்மானங்களுடனான தொடர்பு | பெறுமதி ரூபா | இணங்காமை | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|---|
| (அ) நகர சபை கட்டளைச் சட்டத்தின் 255 ஆம் அத்தியாயம் i 35 (ஊ) பிரிவு | | நுகர சபைக்கு சொந்தமான 3 பொது மலசல | பொது மக்களின் நலன்களை ஏற்படத்துவதற்கு நகர | மூன்று மலசல கூடங்களிற்காக எந்தவொறு |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | கூடங்கள் மக்கள் பயன்பாட்டிற்கு திறக்காமல் மூடி வைக்கப்படடிருந்ததுடன்,அவற்றில் ஒன்றில் காடுகள் வழர்ந்துள்ளது. | சபை கட்டளைச் சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | விண்ணப்பதாரரும் முன்வராமை மற்றும் அதற்கு ஈடுபடுத்த போதிய ஊழியர்கள் இல்லாததால் இம்மலசல கூடங்களை மக்கள் பயன்பாட்டிற்கு திறக்க முடியாதுள்ளது. |
| | (ii)160 பிரிவு | | நகர சபை ஒன்றினால் நகரத்தினுல் உள்ள எந்தவொறு அசைவற்ற சொத்து வகையினதும் வருடாந்த மதிப்பீட்டின் பிரகாரம் வீர வரி விதித்து அறவிட வேண்டிய போதும் 2009 ஆண்டின் பின்னர் வருடாந்த மதிப்பீடொன்று செய்திருக்கவில்லை. | நகர சபை கட்டளைச் சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | 2019 ஆண்டில் மதிப்பீட்டு திறுத்த நடவடிக்கைகளை மேற்கொள்ள தேவையான தகவல்களையும் தயாரித்து பெறுமதி மதிப்பீட்டு திணைக்களத்திற்கு அறிவித்து அனுப்பப்பட்டுள்ளது. |
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை நிதிப்பிரமாணம் (i) 571 (2) | 2,764,366 | 2009 ஆண்டு முதல் 2016 ஆண்டு வரை காலப்பகுதிக்குரிய 137 வைப்பு தொடர்பாக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | நிதிப் பிரமாணம் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | காலம் கடந்த வைப்புகள் தொடர்பாக தற்போது நடவடிக்கை எடுக்கப்படுகின்றதுடன் இவற்றில் பெருமளவு தீர்க்கப்பட்டுள்ளது.. |

| | | | | |
|---|---|---|---|---|
| | நிதிப்பிரமாணம் (ii) 1646 - | சபையின் 22 வாகங்கள் மற்றும் 4 இயந்திரங்களின் ஓட்டக் குறிப்பு மற்றும் மாதாந்த சுருக்க அறிக்கை கணக்காய்வாளரிற்கு சமர்பிக்கப்பட்டிருககவில்லை. | நிதிப் பிரமாணம் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | எதிர் காலத்தில் ஓட்டக் குறிப்புகளை கணக்காய்விற்கு சமர்பிக்க நடவடிக்கை எடுக்கிறேன். |
| (இ) | 2016 திசெம்பர் 29 ஆம் திகதிய இலக்கம் 30/2016 கொண்ட அசர நிருவாக சுற்றறிக்கையின் 3.1 பந்தி | சபையின் 22 வாகங்கள் மற்றும் 4 இயந்திரங்கள் தொடர்பாக எரி பொருள் பரிசீரனை மேற்கொண்டிருக்கவில்லை. | சுற்றறிக்கையின் ஏற்பாடு பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | தற்போது எரி பொருள் பரிசீரனை மேற்கொள்ள வேண்டிய அனைத்து வாகனங்களிறகாகவும் அப் பரிசீனை மேற்கொள்ள தேவையான நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது. |
| (ஈ) | 2009 மார்ச் 09 ஆம் திகதிய 01/2009 இலக்க சபரகமுவ உள்ளுராட்ச்சி ஆணையாளரின் சுற்றறிக்கை 1.10 பந்தி | சபையின் அங்கீகாரம் இன்றி 07 வியாபாரத் கட்டிடத் தொகுதிகளில் 23 கடையறைகள் குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்தன. | சுற்றறிக்கை ஏற்பாடுகள் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும | முறையான அங்கீகாரத்தை பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2018 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கான சபையின் மீண்டுவரும் செலவுகளை விஞ்சிய வருமானம் ரூபா 30,389,841 ஆனதுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவுகளை விஞ்சிய வருமானம் ரூபா 23,069,217 ஆனது.

## 2.2 வருமான நிருவாகம்

### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பில் இடப்பட்ட வருமானம், சேர்க்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆணடு தொடர்பாக முன்வைக்கப்பட்ட மதிப்பிடப்பட்ட வருமானம், பில் இடப்பட்ட வருமானம், சேர்க்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் பின்வருமாறு.

| | | 2018 | | | | 2017 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வருமான மூலம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | பில் போடப்பட்ட வருமானம் | சேர்க்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம | பில் போடப்பட்ட வருமானம | சேர்க்கப்பட்ட வருமானம | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| i | வீத வரி மற்றும் குத்தகை | 11,650,000 | 11,929,495 | 12,351,605 | 2,733,928 | 12,227,000 | 12,227,000 | 11,814,738 | 2,637,989 |
| ii | வாடகை | 42,686,600 | 42,816,095 | 42,801,902 | 3,853,232 | 41,041,582 | 41,689,820 | 41,875,578 | 3,933,412 |
| iii | அனுமதிப்பத்திரக் கட்டணம் | 2,695,500 | 3,614,568 | 3,675,648 | 412,040 | 2,656,500 | 2,592,000 | 3,167,283 | 470,120 |
| iv | ஏனைய வருமானம | 116,737,953 | 116,273,133 | 123,618,300 | 27,583,558 | 128,394,498 | 128,555,498 | 104,868,665 | 35,474,508 |

### 2.2.2 வருமானம் சேகரிப்பதன் செயலாற்றல்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2018 சனவரி 01 திகதிக்கு 04 வருமான தலைப்புகளில் நிலுவை வருமானம் ரூபா 6,837,134 ஆனதுடன் நிலுவை வருமானம் சேகரிப்பதன் செயலாற்றுகை 8 சதவீதம் முதல் 32 சதவீதம வரை மிக குறைந்த அளவில் விலவியது. | வருமானம் சேகரிப்பதில் முன்னேற்றம் ஏற்படுத்திக்கொள்ள வேண்டும். | கடையறை வாடகை அறவிடவதற்கு சட்டரீதியான நடவடிக்கை எடுப்பதுடன் நிலுவை வாராந்த சந்தை கட்டணத்தை பதிவழிப்பதற்கும் காணி குத்தகையை துரிதமாக அறவிடுவதற்கும் நிலுவை வாடி வீடு கட்டணமாக நகர அபிவிருத்தி அதிகார சபையினால் அறவிட வேண்டிய தொகை தொடர்பாக பிரச்சினை தீர்க்கப்பட்டதன் பின் ஏனைய வருமானத்தின் கீழ் உள்ள நிலுவை வருமான அறவிடலின் முன்னேற்றத்தை அதிகரிக்க நடவடிக்கை எடுக்கிறேன். |

**2.2.3 வீத வரி மற்றும் குத்தகை**

| **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **பரிந்துரை** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
|---|---|---|
| மீளாய்வாண்டு இறுதியில் நிலுவை வீத வரி மீதி ரூபா 2,733,928 ஆனதுடன் ஓராண்டை விஞ்சிய மீதி ரூபா 1,375,524 ஆனது. | நிலுவை வீத வரி அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். | ஆதன உரிமையாளர்களை இனங்கண்டு நிலுவை வீத வரி மீதியை குறைத்த மட்டத்திற்கு கொண்டுவர நடவடிக்கை எடுக்கிறேன். |

**2.2.4 வாடகை**

| **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **பரிந்துரை** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
|---|---|---|
| மீளாய்வாண்டு இறுதியில் நிலுவை வாடகை மீதி ரூபா 3,853,232 ஆனதுடன் ஓராண்டை விஞ்சிய காலமாக அறவிடப்படாது உள்ள மீதி ரூபா 3,122,626 ஆனது. | நிலுவை வருமதனத்தை அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். | i நடைபாதை 3 கடையறைகளுக்காக சட்ட நடவடிக்கை எடுத்துள்ளதுடன் எஞ்சிய வாடகையை அறவிட சட்ட நடவடிக்கை எடுக்கப்படுகிறது.<br><br>ii மல சல கூட கட்டணம் தொடர்பாக துரிதமாக தீர்வொன்றை பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்கிறேன்.<br><br>iii நந்திவெலவத்த நிலுவை தொடர்பாக பிரச்சினைக்குரிய நிலைமை காணப்படுகிறது. எவ்வாறாயினும் மீண்டும் பதிவேடுகளை பரீட்சித்து தீர்வெ ான்றை பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்கிறேன்.<br><br>iv அறவிட முடியாதுள்ள வாராந்த சந்தை வாடகை ரூபா 1,532,780 இனை பதிவழிக்கும் கட்டளையை பெற்றுக் கொள்ள சமர்பிக்கப்பட்டுள்ளது.<br><br>v நகர அபிவிருத்தி அதிகார சபையிடமிருந்து அறவிட வேண்டியதாகவுள்ள நிலுவை வாடிவீட்டு வாடகை ரூபா 502,026 தொடர்பாக பிரச்சினைக்குரிய |

நிலைமையுள்ளதால் அந்நிறுவனத்துடன் கலந்துரையாடி பொருத்தமான தீர்வை பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்கிறேன்.

**2.2.5 ஏனைய வருமானம்**

| **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **பரிந்துரை** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
| --- | --- | --- |
| மீளாய்வாண்டு இறுதியில் ஏனைய வருமான நிலுவை மீதி ரூபா 27,583,559 ஆனதுடன் ஒராண்டை விஞ்சி அறவிடப்படாமல் நிலவும் மீதி ரூபா 2,112,839 ஆனது. | நிலுவை வருமானம் அறவடவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | i கொடுப்பனவை புறக்கணித்த விளம்பர பலகை உரிமையாளர்களுக்காக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டு இது வரை ரூபா 45,360 நீதிமன்றத்தில் வைப்புச் செய்யப்பட்டுள்ளது. எஞ்சிய நிலுவை தொகையை பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்படுகிறது.<br><br>ii காணி குத்தகைக்கு வழங்குவது தொடர்பாக எழுத்து மூலம் குத்தகைக்காரர்கள் அறிவூட்டப்பட்டுள்ளனர்.<br><br>iii லொத்தர் அறை வாடகை தண்டப்பணம் இப்போது அறவிடப்பட்டுள்ளது. |

**2.2.6 நீதி மன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்**

| **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **பரிந்துரை** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
| --- | --- | --- |
| மாகாண சபை பிரதான செயலாளரிடம் மற்றும் ஏனைய அதிகாரிகளிடமிருந்து 2018 திசெம்பர் 31 திகதிக்கு பெற வேண்டிய நீதிமன்ற தண்டப்பணம் ரூபா 167,615 மற்றும் முத்திரைக் கட்டணம் ரூபா 8,561,400 ஆனது.ஒராண்டை காலமாக நிலவும் அறவிட வேண்டிய நீதிமன்ற தண்டப்பணம் ரூபா 117,615 ஆனது. | வருமானம் சேகரிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். | இப் பணம் மாகாண சபை ஊடாக கிடைக்கும் வருமானமொன்றாகும். அதனால் உள்ளூராட்சி ஆணையாளர் அலுவலகம் தீர்த்துத் தரும் முறை பிரகாரம் பணம் பெற்றுக் கொள்ளல் செய்யப்படுகிறது. |

## 3 செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றுகை

நுகர சபை கட்டளைச் சட்டத்தின் 04 பந்தியின் கீழ் பொது மக்கள் சுகாதாரம், பொதுப் பயன்பாட்டு சேவைகள் மற்றும் பொதுப் பாதைகள் தொடர்பான விடயங்களை ஒழுங்குபடுத்தலும் கட்டுப்படுத்தலும், மக்கள் நலன், இலகு மற்றும் நலன்புரிச் சேவைகள் போன்ற சபையினால் மேற்கொள்ள வேண்டிய செயற்பாடுகளை நிறைவேற்றுவது தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் பின்வருமாறு.

### (அ) துணைச் சட்டம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| நகர சபை கட்டளை சட்டத்தின் 157 பிரிவின் கீழ் 07 பிரதான விடயங்களை செய்வதற்காக துணைச் சட்டம் விதிக்கபட வேண்டிய போதும் 05 விடயங்களிற்கு மாத்திரம் துணைச்சட்டம் விதிக்கப்பட்டிருந்தது. | துணைச் சட்டம் விதித்து அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | இது வரை விதிக்கப்படாத துணைச் சட்டங்களை எதிர்காலத்தில் விதிக்கவும் தற்போது நிலவும் துணைச் சட்டங்களை காலத்திற்கேட்ப திறுத்தவும் நடவடிக்கை எடுக்கிறேன். |

### (ஆ) செயல் நடவடிக்கை திட்டம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| விதிக்கபட்டிருந்த துணைச் சட்டங்கள் பிரகாரம் சபையினால மேற்கொள்ள வேண்டியிருந்த வேலைகளுக்காக வருடாந்த செயல் நடவடிக்கை திட்டத்தின் பிரகாரம் தயாரிக்கப்பட வேண்டிய முன்னேற்ற அறிக்கை தயாரிக்காத காரணத்தால் எதிர்பார்த்த இலக்குகள் அடைந்துள்ளதா என பரிசீலனை செய்ய முடியாமல் இருந்தது. | செயல் நடவடிக்கை திட்டத்தின் பிரகாரம் முன்னேற்ற அறிக்கை தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | வருடாந்த செயல் நடவடிக்கை திட்டம் பிரகாரம் தயாரிக்க வேண்டிய முன்னேற்ற அறிக்கை உரிய முறையில் எதிர்காலத்தில் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்ககிறேன். |

**(இ) கழிவுப் பொருள் முகாமை**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| முறையான கழிவு பொருள் முகாமைத்துவ முறைமையொன்று இல்லாததனால் கழிவு பொருள் முகாமைத்துவ நிலைய வளவின் பள்ளமான பிரதேசங்களுக்கு உக்கலடையாத கழிவு பொருள் வெளியிடப்பட்டிருந்தன. | உக்கலடையாத கழிவு பொருட்களை வெளியிட ஒழுங்கான முறைமையொன்றை பின்பற்ற வேண்டும். | கழிவு பொருள் வெளியிடும் முழுமையான செயற்பாடும் ஒழுங்கான முறைமையொன்றின் பிரகாரம் மேற்கொள்வதுடன் மீள்சுழட்சி செய்ய முடியுமான அனைத்து கழிவு பொருள்களும் மீள்சுழட்சிக்காக அனுப்பப்படுகின்றன. எனினும் அசுத்த பொலிதீன், இறப்பர், தோல் வகைகள் மற்றும் புடவை வகைகள் போன்ற உக்காத கழிவுப் பொருட்களை வெயிடும் போது கொட்டிலின் இட அளவு போன்றவற்றால் இது இடம் பெற்றுள்ளதுடன் எதிர் காலத்தில் பொருத்தமான நடவடிக்கை எடுக்கிறேன். |

**(ஈ) கைவிடப்பட்ட வேலைகள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| பாதையொன்றின் சுற்று வட்ட அபிவிருத்திகாக ரூபா 1,363,879 பெறுமதியிற்கு 2017 ஒக்தோபர் டென்டர் வழங்கி 2018 ஜுன் 29 ஆம் திகதி ரூபா 249,304 செலுத்திருந்த போதும், 2019 ஏப்ரில் 30 ஆம் திகதி வரையும் இவ் வேலை ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. | வேலையை துரிதமாக பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | குறித்த அனைத்து காணி உரிமையாளர்களும் தற்போது இவ் வேலைக்காக விருப்பத்தை தெறிவித்துள்ளனர். |

## 3.2 முகாமைத்துவ வினைத்திறமையின்மை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) நகர சபை அதிகார பிரதேசத்தில் அமைந்துள்ள 12 லொத்தர் விற்பனை அறைகளின் வருமானத்தை பெற்றுக் கொள்ள உரிய முறைமை ஒன்றை தயாரித்திருக்கவில்லை. | லொத்தர் அறைகளின் வருமானம் அறவிடுவதற்கு உரிய முறைமையொன்று தயாரிக்க வேண்டும். | இப்போது பதியபட்டுள்ள லொத்தர் அறைகளிலிருந்து குறித்த கொடுப்பனவு அறவிடப்பட்டுள்ளது. அவ்வாறே குறித்த முறைமையொன்று பிரகாரம் எதிர்காலத்தில் கொடுப்பனவு பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கிறேன். |
| (ஆ) வழக்கரிஞர் அலுவலக தொகுதியில் ஒர் அலுவலகம் 2008 ஆண்டு முதல் குத்தகை உடன்படிக்கையின்றி வெளித்திப்பினர் ஒருவருக்கு வழங்கியிருந்ததால் ரூபா 105,342 ஆன நிலுவை குத்தகை வாடகையை அறவிடுவதற்கு சட்டரீதியாக நடவடிக்கை எடுக்க முடியாமல் இருந்தது. | நிலுவை வருமானத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | இவ் வழக்கரிஞர் அலுவலக தொகுதியில் குறித்த அலுவலக பகுதியின் நிலுவை குத்தகையை சட்டரீதியாக அறவிட எதிர் காலத்தில் நடவடிக்கை எடுக்கிறேன். |
| (இ) பொது வியாபார கட்டிடத் தொகுதியில் 70 கடையறைகளை முறையாக கடை உரிமையாளர்களுக்கு வழங்கி வருமானம் பெற்றுக்கொள்ள இயலாமலிருந்தது. | கடையறைகளின் வருமானத்தை அறவிட ஒழுங்கான முறைமையொன்றை தயாரிக்க வேண்டும். | நடைபாதை கடைகாரர்களுக்கு வழங்யுள்ள 70 கடையறைகள் இவ்வாறு முறையாக இல்லாததுடன் அது தொடர்பாக எதிர்காலத்தில் உரிய நடவடிக்கை மேற் கொள்ள நடவடிக்கை எடுக்கிறேன். |
| (ஈ) பழைய வாராந்த சந்தையின் 52 கடையறைகளிலிருந்து அறவிட வேண்டிய கடை வாடகை ரூபா 1,532,780 இனை கடை உரிமையாளர்களுடன் ஒப்பந்தம் கைச்சாத்திடாததனால் அறவிட சட்ட நடவடிக்கை எடுக்க இயலாமலுள்ளது. | சட்ட ரீதியான ஒப்பந்தம் மூலம் கடைகளை வாடகைக்கு வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும். | அறவிட வேண்டிய பணத்தை பதிவலிக்க கட்டளை ஒன்றை பெற்றுக் கொள்ளும் அங்கீகாரத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது. |

## 3.3 மனித வள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) ஊழழியர் வெற்றிடங்கள் மற்றும் மிகை அங்கீகரிக்கப்பட்ட ஆளணி 205 மற்றும் உள்ளவாறான ஆளணி 162 ஆனதுடன், 15 பதவி வகைகளில் 43 வெற்றிடங்களும் ஓர் பதவி மிகையுமாக காணப்பட்டது. | ஊழியர் வெற்றிடங்கள் மற்றும் மிகையினை சீர் செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். | அங்கீகரிக்கப்பட்ட ஆளணியில் நிலவும் வெற்றிடங்கள் தொடர்பாக ஒவ்வொரு மாதத்திற்கும் ஒரு முறை உள்ளூராட்சி உதவி ஆணையாளரிற்கு மற்றும் பிரதான செயலகத்திற்கும் அறிக்கையிடப்பட்ள்ளதுடன் அங்கீகரிக்கப்பட்ட ஆளணிக்கு மேலதிகமாக அபிவிருத்தி உத்தியோகத்தர் பதவியொன்று மிகையாக நிலவுகிறது. |
| (ஆ) ஊழியர் கடன் 1997 ஆண்டு முதல் இடமாற்றம் பெற்று சென்ற, சேவையை விட்டுச்சென்ற, மரணித்த, ஓய்வு பெற்ற உத்தியோகத்தர்கள் மற்றும் 20 ஊழியர்களிடமிருந்து அறவிட வேண்டிய ரூபா 93,802 அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்கப்படவில்லை. | நிலுவை கடன் மீதிகளை அறவிடுவதற்க நடவடிக்கை எடுக்க வெண்டும். | இந்த கடன்களுக்கு தொடர்புடைய பெறுப்பாளர்களை இகங்கண்டு கடன் தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கை தயார் செயயப்பட்டுள்ளது. |

## 3.4 சொத்துக்கள் முகாமை

### விளைவற்ற சொத்தக்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| ரூபா 942,803 பெறுமதியான 04 வாகனங்கள் 05 வருட காலத்தை விஞ்சிய காலம் முதல் விளைவற்றதாக நிலவியது. | நீண்ட காலமாக விளைவற்றதாக நிலவும் வாகனங்களை பழுதுபார்த்து பயன்பத்தவோ அல்லது உரிய வேறு செயற்பாடொன்றை | இந்த வாகனங்கள் 2015 ஆண்டின் போது விலை மணு கோரி அகற்றுவதற்கு நடவடிக்கை எடுத்த போதும் அங்கு மதிப்பீட்டு பெறுமதிக்கு குறித்த விலை மணுதாரர் முன் வராமையினால் அவ் வேலையை பூர்த்தி செய்ய |

| | | |
|---|---|---|
| | எடுக்க நடவடிக்கைகள் எடக்க வேண்டும். | முடியாமலிருந்தது. ஆதனால் மீள் பெறுமதி மதிப்பீடொன்று பெற்றுக்கொண்டு முன் நடவடிக்கைகள் மேற்கொள்ள அங்கீகாரத்திற்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. |

**3.5 பெறுகைகள்**

**3.5.1 பெறுகைகள் திட்டம்**

| **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **பரிந்துரை** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
|---|---|---|
| 2018 ஆண்டிற்காக பெறுகைகள் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | பெறுகைகள் திட்டமொன்று தயாரிக்கப்பட்டு அதன் பிரகாரம் பெறுகைகளை மேற்கொள்ள வேண்டும். | ஏதிர்காலத்தில் முறையான பெறுகைகள் திட்டமொன்றை தயாரித்து அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கிறேன். |

**4 கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**4.1 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு**

| **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **பரிந்துரை** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
|---|---|---|
| 2018 ஆண்டிற்காக கணக்காய்வு மற்றும் முகாமைத்தவ குழு நடாத்தப்பட்டிருக்கவில்லை. | கணக்காய்வு மற்றும் முகாமைத்தவ குழு நடாத்தப்பட்டு வெற்றிகரமான உள்ளக கட்டுப்பாடொன்றை அமுல்படுத்த வேண்டும். | 2018 ஆண்டிற்காக அவ் வருடத்தின் திசெம்பர் 21 ஆம் திகதி கணக்காய்வு மற்றும் முகாமைத்தவ குழு நடாத்தப்பட்டுள்ளது. |